[2004 பிப்ரவரி 10

22—

பால் குளிரூட்டும் நிலையம்

***33757—திருமதி நளினி மனோகரன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, களம்பூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போளூர் தொகுதி, களம்பூர் தேர்வு நிலை பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

முற்பகல் 10-10

திருமதி நளினி மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது போளூர் தொகுதியில் போளூர் வட்டத்தை உள்ளடக்கி 500-க்கும் மேற்பட்ட கிராமப் பகுதிகளில் சுமார் 50,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் தொழிலோடு கால்நடைகளையும் பராமரித்து வருகின்றனர். இதனால், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் தனியார் மற்றும் அரசு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக, களம்பூர் பேரூராட்சி மற்றும் அதன் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் மட்டும் நாள் ஒன்றுக்கு 7,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதுபோன்று கொள்முதல் செய்யப்படும் பால் வேலூர் பால் ஒன்றியத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டு வருவதால், பால் வண்டியில் செல்லும்போது, பால் கேன்களிலிருந்து சிந்தி, சிதறி வீணாகிறது. இதனால் பால் கொள்முதல் குறையவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஏற்கெனவே 8-9-2001-ல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கேட்டுள்ளேன். எனவே, பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, மாந்தர்தம் மாணிக்கமாய், மக்களின் மா-சக்தியாய், கேட்டதை வழங்கிடும் வள்ளலாய், தேவையைச் சேவையாய் தரும் தாயே!

2004 பிப்ரவரி 10]

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அடுத்த நிதியாண்டிலாவது களம்பூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மாவை வணங்கி, வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பால் தேவைப்படும். ஆனால், களம்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் நாளொன்றுக்கு உள்ளூர் தேவை போக, மீதி 3,150 லிட்டர் பால் மட்டுமே ஒன்றியத்திற்கு அனுப்புகிறது. ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க ரூபாய் 3 கோடி தேவைப்படும். மேலும் களம்பூர் பகுதியில் ஒன்றியத்திற்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. களம்பூர் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டாலும், போதுமான பால் கிடைக்காது. எனவே, களம்பூர் பேரூராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் வாய்ப்பு இல்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, தற்போது செயல்பட்டு வரும் களம்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் இயந்திரம் "Bulk Cooler" விரைவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, திரு. கோவை தங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

23—

நெசவாளர்களுக்குக் கடன்

***22840—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவுத் தொழிலை மேலும் ஊக்குவிக்க வட்டியில்லாக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?